# யிற்சி மொழிப் பிரச்னை



விலை
15
காசு

கிரஸ் கமிட்டி வெளியீடு-23

# பயிற்சி மொழிப் பிரச்னை

ஆசிரியர் :
**எம். பக்தவத்சலம்**
நிதி-கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு.

வெளியிட்டவர் :
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி
( வெளியீட்டுத்துறை )
**111, மவுண்ட் ரோடு, சென்னை-6.**

முதல் பதிப்பு: அக்டோபர், 1962

விலை 15 ந.பை.

சாந்தி பிரஸ், சென்னை-1.

# பயிற்சி மொழிப் பிரச்னை

மொழி என்பது கருத்துக்களை விளக்கும் முக்கியமான தொரு கருவி. அது சுலபமாக் உணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. மனிதரது உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்த மொழி மிகவும் இன்றியமையாதது. ஆனல், மொழி நமக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும். மொழி நம்மைப் பயன்படுத்தக்கூடாது. அதாவது மொழி முக்கியத் துவம் வாய்ந்த ஒரு கருவியே தவிர அதுவே கர்த்தா என்று ஆகிவிடக்கூடாது. எந்தக் கருவியும் மனித இனத் துக்குப் பயன் தருவதாக அமைய வேண்டுமேயன்றி, மனித இனத்தை அது தவருகப் பயன்படுத்த (இழுத்துச் செல்ல) அனுமதிக்கக்கூடாது. இதைச் சற்று விளக்கமாகப் பார்ப் போம். உதாரணமாக, வாகனம் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததொரு சாதனமாகும். ஓர் இடத்தி லுள்ள மக்கள் மற்றொருஇடத்திற்குச் செல்வதற்கு வாகனம் பயன்படுகிறது. வேலைகள் விரைவாக நடைபெறவும், தொல்லைகள் குறைந்திடவும் வாகனம் உதவுகிறது. வாகனத் தின் மூலம் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலே வாழுகின்ற மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், உறவு கொள்ளவும், பொதுவான வளர்ச்சி காணவும் முடிகிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருவியாக வாகனம் விளங்குகிறது என்பதற்காக, வாகனம் அது விரும்புகின்ற திசையில் நம்மை இழுத்துச் செல்ல நாம் விடுவது கிடையாது. சென்னையிலேயிருந்து கோயம்புத் தூருக்குப் போக நாம் விரும்புகிரோம் என்று வைத்துக்கொள் ளுங்கள். ஆனல், நாம் பிரயாணம் செய்கின்ற வாகனம்-ரெயில் அல்லது பஸ் அல்லது ஆகாய விமானம் - பம்பாய்க் குச் செல்லத் தொடங்குகிறது என்ருல், அது முக்கிய மான கருவியாயிற்றே என்று கருதி நாம் சும்மா இருந்துவிடு

வோமா? ஒருகாலும் இருக்க மாட்டோம். வாகனத்தை ஓட்டிச் செல்லுபவரை அழைத்து, 'இதில் ஏதோ பழுது இருக்கிறது, கோயம்புத்தூருக்குச் செல்ல வேண்டும் என்று கிளம்பினல் பம்பாய் பாதையில் ஓடுகிறது, ஏதோ இயந்திரக் கோளாறு இருக்கிறது; அதை உடனடியாகப் பழுதுபாருங்கள்' என்று சொல்லி, வாகனத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு பயணத்தைத் தொடங்குவோம்.

அதே போலத்தான் எல்லாக் கருவிகளின் நிலையும். உலகத்திலுள்ள பல்வேறு கருவிகளும், சாதனங்களும் மனித நலத்திற்காக, மனித வாழ்க்கையின் அபிவிருத்திக்காக, ஏற்பட்டவை. கருவிகளும், சாதனங்களும் மனிதருக்குப் பயன்படவேண்டும். மனிதருக்காக அவை; அவற்றுக்காக மனிதர்கள் அல்ல. அதேபோலத்தான் மிக மிக முக்கியமானதொரு கருவியான மொழியும், நமக்குப் பயன்படுவதாக — மக்களுடைய வளர்ச்சிக்குத் துணைபுரிவதாக — அமைய வேண்டுமே தவிர, மொழிக்காக மக்கள் என்ற தவருன நிலை ஏற்பட்டுவிடக்கூடாது.

### மொழியும் கடவுளும்

ஒருவிதத்தில் மொழியைக் கடவுளுக்கு ஒப்பிடலாம். மொழியையும் கடவுளையும் தாங்கள்தான் பாதுகாப்பதாக சிலர் சொல்லிக்கொள்ள முற்படுகிருர்கள்—இது அறியாமை. மொழியையும், கடவுளையும் சில குறிப்பிட்டவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிருர்கள். அதுவும் முற்றிலும் தவருகும். இறைவன் அநாதியானவன்; எல்லாம் வல்லவன்; எல்லாச் சக்திகளுக்கும் மேலான சக்திபடைத்தவன். எனவே, 'இறைவனை நான் பாதுகாக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு யாரேனும் கிளம்புகிருர்கள் என்ருல் அது பேதமை மட்டுமல்ல, அப்பழுக்கற்ற அகங்காரமுமாகும். அதேபோலத்தான் மொழியைப் பாதுகாப்பதாகச் சொல்லிக்கொண்டு மொழியால் வளர நினைப்பவர்களது நிலையும்.

நம் தமிழ்மொழி புனிதமான தெய்விகம் பொருந்திய மொழியாகும். உலகத்திலுள்ள பல்வேறு மொழிகளில் மிகப் பழமையும், சிறப்பும் பல்வேறு நாட்டவர்களால் புகழ்ந்து பேசப்படும் தகுதியும் உடையதாகும். அத்தகைய மொழி 'ஆபத்தான நிலேயிலே இருக்கிறது, அதை நசுக்குவதற்காக ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் சூழ்ச்சி செய்கிருர்கள். அந்தச் சூழ்ச்சியை தடுத்து நிறுத்துவதற்காகவே நான் அவதாரம் செய்திருக்கிறேன்!' என்று சொல்லிக் கொண்டு அரசியல் துறையிலே உள்ளவர்கள் வம்புக்கு இழுத்து, தங்களுடைய சொந்த நலனுக்குப் பயன்படுத்தப் பார்ப்பது தமிழ் மொழிக்கே இழுக்குத் தேடுவதாகும். சிறப்பும், பெருமையும் கொண்ட நம் தமிழ்மொழிக்கு யாரும் ஆபத்து விளேவிக்க முடியாது. அப்படிச் சொல்லுவதெல்லாம் உண்மையிலேயே மொழிக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை மனதில் கருதுவதால் தான் என்று எண்ணிவிடாதீர்கள். தங்களுடைய சொந்த வளர்ச்சிக்கு வேறு வழியில்லே என்ற நிலே வரும்போது 'ஐயையோ மொழிக்கு ஆபத்து' என்று கூறி, அதன் மூலம் மக்களிடையே, குறுகிய — ஆபத்தான — மொழிவெறியைக் கிளப்பிவிட்டு அரசியல் நடத்த விரும்பும் இழிதகைமையாளர்களின் செயல்தான் இது !

## தமிழ்மொழியைத் தாங்குகிருர்களாம் !

இன்னெரு வெட்கக்கேட்டையும் தமிழ்நாட்டிலே பார்க்கிருேம். இங்கே ஒரு சிலர் மொழிப்பற்று அல்லது தாய் மொழிப்பற்றுத் தங்களுக்கே உரியது என்று சொந்தம் கொண்டாட முற்படுகிருர்கள். இப்படிக் கூறிக்கொள்வது முட்டாள் தனம். ஏதோ தமிழ்மொழி இவர்களுக்கே முழுவதும் உரியது போலவும், மற்றவர்கள் எல்லோரும் தமிழுக்கு விரோதிகள் போலவும், இவர்கள்தான் கோபுரத்தை பொம்மை தாங்குவது போலத் தமிழைத் தாங்கிக் கொண்டிருப்பது போலவும், இவர்களே விட்டால் தமிழுக்கு வேறு கதியே கிடையாது போலவும் எண்ணிக்கொண்டு இருக்கின்ற இந்த 'மாமேதைகள்' உண்மையில் தமிழர்களேக்கூட உள்ளபடியே புரிந்துகொள்ள

முடியாதவர்கள்! இந்த இலட்சணத்தில் தமிழை எங்கே புரிந்து கொண்டிருக்கப் போகிறார்கள்? இவர்களைப்போலவே, ஏன், இவர்களைவிட ஒருபடி மேலாகவே தமிழ்ப்பற்றுக் கொண்டவர்களும், தமிழ் மொழியினிடத்தே அன்பும், அக்கறையும் உடையவர்களும் பலர் இருக்கிறார்கள் என்பதை அறியாத இந்தப் பேதைகளைப் பார்த்து நாம் இரக்கம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதே நேரத்தில் இவர்களால் விளையக்கூடிய செயல்களை நாம் மறந்துவிட முடியாது. மொழிப்பற்றுத் தமக்கே உரியது என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இத்திருக்கூட்டத்தார், ஒன்றும் அறியாதவர்களிடம் சென்று, உண்மைக்கு மாறான சம்பவங்களைக் கூறி, ஒருவித வெறியை உண்டாக்குகிறார்கள். இதன் விளைவாக அறியாமையின் ஆட்சி மேலும் ஒருபடி சென்று, பிரத்தியேக உரிமை கொண்டாடத் தொடங்குகிறது.

தமிழ் மக்களாகிய நாம் நம் முன்னோர்களுடைய புலமையைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறோம். அது நியாயமானது ஆகும். ஆனால், இன்றைய தமிழ்க் குழந்தைகளுக்கு, இன்றைய உலகச் சூழ்நிலையில், எத்தகைய அறிவை ஊட்டுவது, எப்படிப் பெருமை தேடுவது என்பதைத்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

### கம்பனைத் துணைக்கு அழைக்கிறார்கள்!

இளங்கோ எந்தக் கல்லூரியில் படித்தவர் என்று ஒருவர் மேதாவிலாசம் ததும்பி வழிகின்ற கேள்வி ஒன்றைக் கேட்டார். 'இளங்கோ எங்குப் படித்தார், என்ன மொழி படித்தார், என்ற விவரங்கள் கேள்வி கேட்ட மனிதருக்குத் தெரியுமா?' என்று நான் பல்வேறு கூட்டங்களில் கேட்டு வருகிறேன்; பதில் சொல்ல ஆளைக் காணோம்!

இன்னொருவர், கம்பன் படித்த படிப்புப் போதாதா, என்று கேட்டிருக்கிறார். அந்த ஒப்புயர்வற்ற புலவன் என்ன படித்திருந்தான் என்பது யாருக்கும் தெரியாது. மேலும், கம்ப

ராமாயணத்தைச் சிறப்பாகப் படிப்பதோடு இன்றையதினம் தேவைப்படுகின்ற பொதுஅறிவை நாம் நம் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறேம். பழந்தமிழ் இலக் கியங்கள் மிகவும் சிறப்புடையவை என்பதை நான் மிக நன்ருக அறிவேன். இளங்கோவின் சிலப்பதிகாரமும், மகா கவி கம்பனின் ஒப்புயர்வற்ற இராமாயண காவியமும், திருவள்ளுவரின் அழகிய குறளும் இத்தகைய பிற நூல்களும் தமிழ் மக்களுக்கே பெருமை தருவனவாகும். அதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் இல்லே. ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்ஞல் வாழ்ந்த அந்த மாபெரும் புலவர்கள் அவர் களுடைய தொண்டின் மூலம் தமிழ் மொழியின் தகுதியை மிக உயர்ந்த அளவுக்கு உயர்த்திவிட்டுச் சென்றிருக் கிருர்கள்.

இன்றையதினம் நாம் செய்ய வேண்டியதென்ன? புதிய சிறப்புக்களேத் தேட வேண்டாமா-புதிய சிந்தனேகளே வளர்க்க வேண்டாமா-தமிழ் மொழிக்குப் புதிய தகுதியை ஏற் படுத்த வேண்டாமா? இளங்கோ ஆங்கிலம் படித்தாரா, கம் பன் எந்தக் கல்லூரியில் படித்தார், என்ற பேதமை நிரம்பி வழியும் கேள்விகளின் மூலம் புதிய சிந்தனேகளேயோ தமிழுக் குப் புதிய அந்தஸ்தையோ, இன்னும் தெளிவாகச் சொல்லப் போனுல் தமிழர்களுக்குப் புதிய வளர்ச்சியையோ ஏற்படுத்த முடியாது! வளர்ச்சிக்குத் தடை போடத்தான் இந்தப் பேதமை பயன்படும்.

இன்னென்று பாருங்கள். கம்பனேயும், இளங்கோவையும் உதாரணத்திற்கு அழைக்கின்றவர்களுக்காக இதைச்சொல்லு கின்றேன் - அவர்களது மனசாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லட்டும், இன்றையதினம் ஒப்புயர்வற்ற கம்பராமா யணத்தை எத்தனே பேர்கள் ஒழுங்காகப் படித்திருக்கிருர்கள்? எத்தனே பேர்கள் சிலப்பதிகாரத்தின் அருகிலே சென்றிருக் கிருர்கள்? அநேகமாக யாருமே இத்தகைய நூல்களேப் படிப் பது கிடையாது என்பதுதானே உண்மை!

**தமிழை அழிப்பவர்கள் யார் ?**

இந்த நிலைக்குக் காரணம் என்ன ? யார் ஆளுங்கட்சியை எதிர்ப்பதில் முரட்டுத்தனம் காட்டுகிறார்களோ, யார் தமிழ் மொழியைப் பாதுகாப்பதில் தாங்கள்தாம் முன்னணியில் நிற்ப தாக வாய்ச்சிலம்பம் பேசுகிறார்களோ, யார் தமிழ்க்காவலர் கள் தாங்கள்தாம் என்று உரத்த குரலில் பிரகடனம் செய்து கொள்ளுகிறார்களோ, அவர்கள் அனைவரும் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய உலகில் வளர்ந்துவரும் விபரீத-ஆபாச நிலையைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கான பொறுப்பு அவர்களுக்கும் உண்டு என்பதை உணர வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள ஒரு இயக்கம் ஆபாசமாகவும் தரக்குறைவாகவும், படிப்போர் வெட்கித் தலைகுனியும் வண்ண மும் தமிழை எழுதியும் பேசியும் வருகிறது. அந்த இயக்கத் தைச் சேர்ந்தவர்கள் தங்களைத் தமிழ்க் காவலர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள். தொடர்ந்து ஆபாசமான முறையில் தமிழ்மொழியில் பேசியும், எழுதியும் வரும் அந்த இயக்கத்திற்கு மறைமுகமாகச் சில தமிழறிஞர்களும்கூட ஆதரவு வழங்கி வரும் வெட்கக்கேட்டையும் இங்கே நாம் பார்க்கி றோம்.

இத்தகையோரின் விபரீதப் போக்கால்தான் கம்பராமா யணம், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் பயிலப்படுவது என்ற நிலை மாறி, உணர்ச்சிகளைத் தூண்டும் தரக்குறை வான ஆபாசப் புத்தகங்கள், மேலே குறிப்பிடப்பட்ட இயக்கத் தால் நாடு பூராவும் பரப்பப்பட்டுத் தமிழ்மொழியின் சிறப்பே ஓரளவுக்கு மங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

உடனடியாக மருத்துவம் செய்யப்பட வேண்டிய வியாதி இது. தமிழறிஞர்கள் என்ன செய்யப் போகிறார்கள் ? தமிழ்க் காவலர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுபவர்கள் தங்களால்தான் இந்த நோய் பரவியது என்று உணர்ந்த பிறகேனும் அதற்குரிய பாவ மன்னிப்பைத் தேடி, பரிகாரம் காண முற்படப் போகிறார்களா இல்லையா ? தங்களால்தான்

தமிழே வாழுகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களது நிலை என்ன-உண்மையான நோய் இதோ என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளதே, இதைத் தீர்க்க **அவர்களும் முன்வருவார்களா?** இத்தகைய கேள்விகளை உண்மையான தமிழ்ப்பற்றுக் கொண்ட மக்கள் எழுப்புகிறார்கள்.

கல்விமுறை மாறுதல்களில் சில பிழைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காண்கிறோம். தமிழ்ப் பாட புத்தகங்களை நிர்ணயிப்பதிலேகூட முன்பு, பழைய புலவர்கள், புதிய புலவர்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டுக் கவியரசர் பாரதியார் போன்றவர்கள் புகழ்ந்து போற்றிய தமிழ்ப் புலமை இன்றைய பாடப் புத்தகங்களிலேயே போதிய இடம்பெறாத ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

## தமிழுக்கு எதிரி அல்லன்!

ஒரு சிலர் பறைசாற்றிக் கொள்ளுவதுபோலச் செய்து கொள்ளுவது கிடையாதே தவிர எனக்கும் தமிழ் ஆர்வம் உண்டு. தமிழ்மொழியால் ஆகாதது ஒன்றும் இல்லை என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. மற்றவர்கள், குறிப்பாகத் தாங்கள் தீவிர மொழிப்பற்றுக் கொண்டிருப்பதாகச்சொல்லிக் கொள்ளுபவர்கள், தயங்கிய காலத்திலேயே நான் எல்லா வகையான மேடைகளிலும் தமிழிலேயே பேசியிருக்கிறேன்.

இருபத்திரண்டுஆண்டுகளுக்கு முன்பு உலக அரசியல் அமைப்புச் சட்டங்கள் (World constitutions) பற்றிச் சென்னை மயிலாப்பூரில் ஒரு கூட்டத்தில் பேசும்போது பலநாடுகளின் அரசியல் அமைப்புச் சட்ட விவரங்களைத் தமிழிலேயே எடுத்துரைத்தேன். அங்குக் கூடியிருந்தவர்களில் பெரும்பாலோர், முக்கியமாக ஆங்கிலம் பயின்றவர்கள், ஆச்சரியப்பட்டார்கள்.

இப்போது ஆளும் பொறுப்பிலே உள்ளவர்களும் தமிழுக்கு எதிரிகள் அல்லர். தமிழ் மொழியின்வளர்ச்சிக்காகத் "தமிழ் அபிவிருத்தி ஆராய்ச்சிக்குழு" (Tamil Development Research council) அமைத்திருப்பது இந்த அரசினர்தான். அதேபோல "தமிழ்ப் புத்தக வெளியீட்டுக்குழு" (Bureau of

Tamil Publications) அமைத்து அதற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இக்குழுவின்மூலம் கல்லூரிகளுக்கான புத்தகங்களோடு, சிறந்த தமிழ் நூல்கள் பலவும் வெளியிடுவதாக இருக்கிறோம். ஆகவே தமிழால் எதுவும் இயலும் என்ற நம்பிக்கை எங்களுக்கு, குறிப்பாக எனக்கு இருக்கிறது.

**உயர்நிலைப்பள்ளிகளில் பயிற்சிமொழி**

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் பல்லாண்டுகளாகத் தமிழ் பயிற்சி மொழியாக இருந்து வருகிறது. ஆனால், ஆங்கிலம் அடியோடு எப்போதும் அகற்றப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். சென்ற ஆண்டிலே கூட சில பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக வைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மேலும் சில பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கும் சில பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து பல வருடகாலமாக ஆங்கில மொழியின் மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது - அது ஒன்றும் புதியது அல்ல.

தமிழ்மொழி தாய்மொழியாக இல்லாத சிறுபான்மையோர்களுக்காகவும், ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அடிக்கடிமாறி வாழவேண்டியவர்களுக்காகவும் தகுந்த பயிற்சி மொழியை அமைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவர்கள் சிறுபான்மையோராக இருக்கலாம். ஆனால், இவர்களது வசதிகளையும் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. சிறுபான்மையோர் பிரதிநிதிகள் ஆங்கிலம் சில இடங்களில் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறார்கள்.

நாம் ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். இத்தனை ஆண்டுகளாகத் தமிழ் பயிற்சிமொழியாக இருந்துவந்தும்கூட ஆங்கிலத்தின் மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி ஒரு சிலர் கோரினால் அதை மறுப்பது முறையல்ல.

இங்கே இன்னொரு விஷயத்தை நான் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். பொதுவாக உயர்நிலைப்பள்ளி அளவில், தமிழ்தான் பயிற்சிமொழி. ஆங்கிலம் பயிற்சிமொழியாக இடம் பெறுவது, நான் மேலே குறிப்பிட்டிருப்பது போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய விதிவிலக்காகும்.

ஆனல், கல்லூரிகளில் எது பயிற்சிமொழியாக இருப்பது என்பது வேருெரு முக்கியமான கோணத்திலிருந்தும் கவனிக்கப்பட வேண்டும். குழந்தை பிறந்தது முதற்கொண்டு தாய்ப்பாலேயே உண்டு வருவதால் அது எப்போதுமே தாய்ப் பாலைத்தான் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவதில்லை. அதே போலத்தான் பயிற்சிமொழி விவகாரமும். கல்லூரிகளில் படிக்க வருகின்ற மாணவ, மாணவியர் வேறு மொழிகளைச் சேர்ந்த பல்கலைக் கழகங்களிலும், வெளிநாடுகளிலுள்ள கல்வி ஸ்தாபனங்களிலும் படிப்பதற்கான ஆர்வத்துடன் வருகிருர்கள். அவர்களுடைய ஆர்வத்துக்குத் தடையாக நாம் இருக்கிறோம் என்ற எண்ணத்தை உண்டாக்கக் கூடாது.

## ஆங்கிலம் தொடர்பு-மொழி

'கற்றது கைம்மண் அளவு' என்ற உலக வாழ்க்கை நம் கிராமங்களிலேயுள்ள மக்கள் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள். நம்முடைய பெரும் புலவர்கள் பல்வேறு நாடுகளோடும் மொழிகளோடும் நாம் தொடர்பு கொண்டு நமது தாய் மொழியின் சிறப்பைமேலும் வளர்க்கவேண்டுமென்று பெரிதும் விரும்பிப் பாடியிருக்கிருர்கள். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற சொற்களின் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் பூங்குன்றனுரும் 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்'' என்று திருமூலரும் உலகத்திலே உள்ள அனைவருடனும் நாம் உறவு கொண்டு வாழ வேண்டும் என்பதை வற்புறுத்தியிருக்கிருர்கள். திருமுருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரரும் அந்த நூலின் தொடக்கத்தில், 'தமிழகம் உவப்ப' அல்லது 'பாரதம் உவப்ப' என்றெல்லாம் சொல்லாது **'உலகம் உவப்ப'** என்று தொடங்கிப் பாடியதின் மூலம் அவருடைய உலகக் கண்ணேட்டத்தை

வெளிப்படுத்தியிருக்கிறார். பூங்குன்றனாரும், திருமூலரும், நக்கீரரும் விரும்பியபடி உலகத்தாரெல்லாம் நம் உறவினராக ஆவதற்கு முதற்படி உலகத்திலுள்ள பல்வேறு மொழிகளையும் பயின்று அவர்களோடு தொடர்பு கொள்ளுவதாகும். முக்கியமாக உலகப் பொதுமொழியாகவும் வியாபாரத்திற்கும் விஞ்ஞானப் படிப்புக்கும் மிக மிக இன்றியமையாத மொழியாகவும் உள்ள ஆங்கிலத்தை அவசியம் பயிலவேண்டும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' என்று கவி பாரதியார் பாடினாரே, பிற மொழிப் புலமை-குறிப்பாக ஆங்கில மொழிப் புலமை - இல்லாமல் இது எப்படிச் சாத்தியமாகும்? குறுகிய உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல், பாரபட்சமற்ற இதயத்தோடும், நிதரிசனக் கண்ணோட்டத்தோடும் இதைப் பார்க்க வேண்டும்.

## உள்ள உரிமையை இழப்பதா?

இன்னொரு கோணத்திலிருந்தும் கல்லூரிப் பயிற்சி மொழிப் பிரச்னையை நாம் பார்க்கவேண்டும். நம் நாட்டு ஆட்சிமுறை, மாநில ஆட்சி, மத்திய ஆட்சி என்ற இரு பிரிவுகள் கொண்டதாகும். மாநில ஆட்சியை நாமே நடத்துகிறோம். மத்திய ஆட்சி, பல்வேறு மொழிகள் பேசும் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத்தவராலும் நடத்தப்படுகிறது. மத்திய ஆட்சியில் போதிய பங்குபெற நமக்கு உரிமையுண்டு. இதை மறக்கக்கூடாது. கல்லூரியில் பயிற்சி மொழியாகக் குறிப்பிட்ட ஒரு மொழியைக் கொள்ளுவதின் மூலம் அந்த உரிமை பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை ஏற்படக்கூடாது.

மத்திய ஆட்சிமொழியாகத் தமிழ்மொழி இருக்கமுடியாது. இந்தி மொழியோடு ஆங்கில மொழியையும் அங்கே ஆட்சி மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்பது இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் கல்லூரியில் பயிற்சி மொழியாக இருப்பதால் மத்திய ஆட்சியில் நமக்குரிய பங்கைப்பெற முடிகிறது என்பதை மாணவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கான உத்தியோகப் பரீட்சைகள் எழுதித் தேர்வதிலே இந்தியாவிலேயே தமிழ் மாணவ, மாணவியர் முன்னணியில் இருக்கிறார்கள். ஆங்கிலப் பயிற்சி

மொழி வசதி இல்லையென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருப்பதைக் காண்கிறோம். இதை மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இதை மாணவர்களும் நன்றுகவே உணர்வதனால்தான் கல்லூரிகளில் தமிழ் மூலம் பாடங்கள் கற்றுக்கொள்ளுவதில் போதிய உற்சாகம் காட்டவில்லை. இது தான் உள்ள நிலைமை. இதை மூடி மறைத்துக் காட்டுவதில் பயனில்லை.

இந்தியாவிலுள்ள ரயில்வே, தபால், பாதுகாப்பு, நிதி இலாகாக்கள் போன்ற மத்திய ஆட்சிக்கு உட்பட்ட எல்லாக் காரியாலயங்களிலும் தமிழர்கள் இன்றையதினம் மிக முக்கியமான, செல்வாக்கான, இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதனால் தமிழருக்கும் பெருமை, தமிழ்நாட்டுக்கும் பெருமை. அவசரமாக விளைவுகளைக் கவனிக்காமல் நடவடிக்கை எடுப்பதின் மூலம் இந்தச் செல்வாக்கை நாம் சிதைத்துக் கொள்ளலாமா? இந்தப் பெருமையைப் பாழ்படுத்திக் கொள்ளலாமா? தயவு செய்து யோசித்துப் பார்க்கவேண்டும்.

20,000 தமிழர்கள் டில்லி 'செக்ரடேரியட்டில்' மட்டும் கௌரவமான வேலைகளில் இருக்கிறார்கள். இன்னும் இதே போல பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பம்பாய், கல்கத்தா போன்ற வட இந்தியப் பகுதிகளில் செல்வாக்கான வேலைகளில் இருக்கிறார்கள். பக்ராநங்கல், பிலாய், துர்காபூர் போன்ற இடங்களில் தமிழர்கள் பெரிய 'என்ஜினியர்'களாகவும் உயர்தர அதிகாரிகளாகவும் பணியாற்றுகிறார்கள். ஆங்கிலப் படிப்பு இல்லாமல் இவையெல்லாம் சாத்தியமாகுமா?

சமீபகாலமாக இந்திய தேசிய ஒருமைப்பாடு வற்புறுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள இரண்டொரு கட்சிகளைத் தவிர அநேகமாக எல்லா அகில இந்தியக் கட்சிகளும், பிரதேசக் கட்சிகளும் இதை ஒப்புக்கொள்ளுகின்றன. ஒருமைப்பாடு தேவை என்ற அடிப்படைப் பிரச்னையில் அபிப்பிராய பேதம் இல்லை. தேசிய ஒருமைப்பாடு வலியுறுத்தப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில் நாம் எவ்வாறு செயல்படுவது என்று தீர்மானிக்க வேண்டும். இதை மனதில் கொண்டுதான்

சிறந்த தேசபக்தரும், உத்திரப்பிரதேசத்தின் முன்னாள் கல்வி-முதலமைச்சருமான திரு. சம்பூர்ணனந்த் அவர்களைத் தலைவ ராகக் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவினர், பிராந்திய மொழிகளோடு ஆங்கில மொழியும் கல்லூரியில் பயிற்சி மொழி யாக இருக்கவேண்டும், என்று ஆலோசனை வழங்கி இருக் கிறார்கள். ஒரு சிலர் வற்புறுத்துவதுபோல் பல்கலைக்கழகத் தில் தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்; தேசிய ஒருமைப்பாடு பாதிக்கப்படும். நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் எல்லாம் தனித்தனி ஸ்தாபனங் களாகிப் பிரிவு மனப்பான்மை வளர இடம் ஏற்பட்டுவிடும்.

**குறுக்கே நிற்கவில்லை!**

கல்லூரிகளில் தமிழ், பயிற்சிமொழியாக இருப்பதைநான் என்றும் ஆட்சேபிக்கவில்லை; குறுக்கேயும் நிற்கவில்லை. ஆங்கிலம் கல்லூரியில் பயிற்சி மொழியாக இருப்பதை ஒரே யடியாக எடுத்துவிடுவதைத்தான் நான்ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே ஒவ்வொரு கல்லூரியும் ஆங்கிலத்தோடு, தமிழையும் பயிற்சி மொழியாக வைப்பதற்கு முன்வர வேண்டுமென்று கொள்ளுகிறேன்.

இது மாணவர்களைப் பொறுத்த விஷயம். இதில் கட்டா யப்படுத்துவது நல்லதல்ல. பரீட்சார்த்தமாகக் கோவையில் தமிழ்மொழியைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் திட் டத்தை மேற்கொண்டிருக்கிறோம். போதிய மாணவர்கள் வரவில்லை. கோவையில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் நூற்றுக்கு 48 பேர்கள்தாம் வந்திருக்கிறார்கள்; பி. எஸ். ஜி. கல்லூரியில் நூற்றுக்கு 26 பேர்கள்தாம் சேர்ந்திருக்கிறார்கள். அவிநாசி ஹோம் சயன்ஸ் கல்லூரியில் 24-க்கு 11 பேர்கள் தாம் சேர்ந்திருக்கிறார்கள். இப்படி மாணவர்கள் போதிய அளவில் வராமலும், இந்தத் திட்டத்தில் உற்சாகம் காட்டாம லும் இருந்தால் நாம் கட்டாயப்படுத்த முடியாது.

இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். ஒரு சில கல்லூரிகளில், ஆதரவு இருக்கிறது என்று தெரிந்து, ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருப்பதை அடி

யோடு எடுத்துவிட்டு தமிழைப் பயிற்சி மொழியாக்க முன் வந்தால் அதற்கும் ஆதரவு தர நான் தயாராக இருக்கிறேன்.

எனவே, இதில் விவாதத்திற்கோ அல்லது கிளர்ச்சிக்கோ சற்றும் இடமில்லை. ஏமாற்றம் அடைந்த அரசியல்வாதிகள் அல்லது இந்தப் பிரச்னையை எழுப்பித் தங்கள் சுயநலத்திற் குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பார்க்கின்றவர்கள் தான் இதைக் கிளப்பி வருகிறார்கள். இது முறையல்ல.

தமிழ், பயிற்சி மொழியாக இருந்தால் மட்டும்தான் அதைப் படிப்பது என்றில்லை. தமிழுக்கு உரிய சிறப்பு இப் போது வழங்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரர் காலத்தில் தமிழையும் இதர பிரதேச மொழிகளையும் 'வெர்னகுலர்ஸ்'' அதாவது அடிமை மொழிகள்—என்று அழைத்தார்கள். இன்று அந்த இழிநிலை கிடையாது. தமிழ் எல்லாவகை யிலும் சிறந்து வளருவதற்கான செயல் முறைகளை ஆளும் பொறுப்பிலே உள்ளவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, தமிழை நன்றாகக் கற்க அனைவரும் முன்வர வேண்டும்.

### பிறநாடுகளைப் பார்த்தீர்களா ?

உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் தங்களுடைய நாட் டுக் குழந்தைகளுக்கு அந்தந்த நாட்டுத் தாய்மொழியுடன் பிறமொழிகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அவசி யத்தை உணர்ந்து அதில் அதிகக் கவனம் செலுத்தி வருகின் றன. நமது பிரதமர் நேருஜி தாம் சமீபத்தில் இதுபற்றிக் கண்டதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். எகிப்து நாட்டில் பிள்ளைகளுக்கு அராபிய மொழியுடன், ஆங் கிலமும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இங்கிலாந்தில் ஆங்கிலத் துடன், பிரெஞ்சு மொழியும் சொல்லித் தரப்படுகிறது. உயர்ந்த கல்விமான் என்று விளங்க ஆசைப்படுபவர்கள் லத்தீன் மொழியை இன்றும் பயிலுகிறார்கள். அமெரிக்காவில் பல ராஜ்யங்களில் ரஷிய மொழி சிறு வயதிலிருந்தே பள்ளிச் சிறுவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. ரஷிய நாட்டில் பல பிரதேசங்களில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

V311 : 3 (P)

லெனின்கிராட் நகரத்திலுள்ள ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலத்தின் மூலமே பாடங்கள் போதிக்கப்படுகின்றன என்று நான் கேள்விப்பட்டேன்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டில் மொழிப்பிரச்னை பற்றிய விவாதம் எவ்வளவு அர்த்தமற்றது என்றே தோன்றும்.

## தொடக்கநிலையில் ஆங்கிலம்

ஆங்கிலப் படிப்பு போதிய அளவுக்கு இருக்கவேண்டும் என்பதற்கான காரணங்களில் சிலவற்றை இக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆங்கிலத் திறமைக்குப் பெயர்பெற்ற தமிழ்நாட்டில் இன்றைக்குத் தரக்குறைவு என்ற புகார் சொல்லப்படுகிறது. முன்பு நம் மக்கள் விரும்பி வந்ததுபோல் கீழ் வகுப்புகளிலிருந்து ஆங்கிலம் போதிக்கப்பட்டு வந்தது. அந்த முறை சில ஆண்டுகளுக்கு முன்பு மாற்றப்பட்டு மேல் வகுப்பிலிருந்து ஆங்கிலம் என்று கொண்டு வந்தார்கள். இதன் விளைவாகத்தான் மாணவ, மாணவிகளின் தரம் குறைந்துவிட்டது. ஆகவே, தென் மண்டல ராஜ்ய அரசாங்கங்கள் இது சம்பந்தமாக ஏகோபித்துச் செய்த ஆலோசனைகளின்படி ஆங்கிலப் பாடம் மூன்றாவது வகுப்பிலிருந்தே இனி தொடங்கப்படவிருக்கிறது. இந்த ஏற்பாட்டின் மூலம் நாம் புதிதாக எதையும் செய்யவில்லை. ஏற்கெனவே இருந்த முறையை மீண்டும் கொண்டு வந்திருக்கிறோம். இதில் குழந்தைகளுக்குக் கஷ்டம் ஒன்றும் இல்லை. இதில் சம்பந்தமும், அக்கறையும் இல்லாதவர்கள்தான் 'ஆங்கிலத்தின்மீது போர் தொடுப்பேன்' என்று பேசி வருகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் "முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலமும் ஆரம்பித்து விடவேண்டும். நான் இதை வேடிக்கையாக அல்ல, உண்மையாகவே சொல்லுகிறேன்" என்று வினோபாஜி அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற அஸ்ஸாம் பிரதேச சர்வோதய மண்டலின் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ளதைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

**தமிழை வளர்ப்போம் வாரீர் !**

நான் ஏற்கெனவே இந்தக் கட்டுரையில் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளபடி மத்திய ஆட்சி மொழியாக இந்தியோடு ஆங்கில மொழியையும் வைத்துக்கொள்ளலாம் என்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பல மொழிகள் பேசப் படுகின்ற நம் நாட்டில் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்தி மொழியைத் தென்னிந்தியாவில் உள்ளவர்கள் பல வருஷங்களாகக் கற்றுக்கொண்டு வந்திருந் தாலும் இன்றுகூட அந்த மொழியை நம்மால் சரியாகக் கையாள முடியவில்லே. **அதற்குப் பதிலாக ஆங்கிலத்தைத் தான் நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும்**; வேறு வழி எதுவும் கிடையாது. தேச ஒற்றுமையிலும், ஒன்றுபட்ட முன்னேற்றத் திலும் அக்கறை கொண்ட எல்லா அறிஞர்களும் இதை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

**இந்தி மொழியின் உற்சாகிகளுக்கு ஆங்கிலத்தின்மீது அறியாமையினுல் ஏற்பட்ட வெறுப்பினுல் அம்மொழியை எதிர்த் துப் போர் தொடுக்கிருர்கள் என்ருல் நம்மிலே சிலரும் அவர் களுடன் சேர்ந்துகொள்ளுவது விவேகமானது அல்ல.** நான் யோசித்து வருகிற கல்லூரிப் பயிற்சிமொழித் திட்டத்தில் தமிழ் மூலம் பாடங்கள் எந்தக் கட்டத்திலும் விரும்புகிறவர் களுக்குக் கற்பிக்கப்படுவதற்குப் போதிய ஆதரவு இருக்கும். கல்லூரிகளில் ஆங்கில மொழியின் மூலமும் பாடங்கள் கற்பிக்கப்படும். தாய்மொழியை மாணவ மாணவிகள் நன்ரு கக் கற்றுக் கொள்ளுவதற்கு எல்லாவிதமான வசதிகளும் அளிக்கப்படும்.

ஆகவே, மீண்டும் குறிப்பிடுகிறேன், இதில் கிளர்ச் சிக்கோ ஆர்ப்பாட்டத்திற்கோ இடமில்லே. கம்யூனிஸ்ட் கட்சியினரின் நாட்டுப்பற்றை நாம் எல்லோரும் நன்ருக அறிந்திருக்கிருேம்! அவர்களுக்கு மொழிப்பற்றும் கிடை யாது, நாட்டுப்பற்றும் கிடையாது. ஆனுல் அவர்களும் பயிற்சிமொழிப்பிரச்னேயில் தமிழைப்பாதுகாக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ய முயலுகிருர்கள். அவர்களுடைய இத்தகைய இரட்டை நாக்குத் தன்மையை

நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம்; இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. சீனர் ஆக்கிரமிப்புப்பிரச்னை மிகவும் அபாயகரமான திருப்பத்தில் இருப்பதால், மக்களுடைய கவனத்தை வேறு திசையில் இழுப்பதற்காக இவர்கள் இத்தகைய கிளர்ச்சிகளைத் தொடங்குகிறார்கள் !

எனக்கு நன்றாகத் தெரியும்: மக்கள் இந்தக் கிளர்ச்சியை ஆதரிக்கவேயில்லை. இவற்றின் போலித்தன்மையை மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

ஆகவே நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம் சிறந்த பொக்கிஷமாகிய தமிழ்மொழியை நன்கு வளர்ப்போம், அதற்கு எல்லோரும் முன் வாருங்கள். தமிழ்ப்பண்பாட்டைப் பேணுவோம்; அதற்கு எல்லோரும் ஆதரவு தாருங்கள்.

விடுதலை பெற்ற பாரதத்தின் பல்வேறு பகுதிகள் எல்லா வகையிலும் முன்னேறுகின்றன. தமிழர்களாகிய நாம், குறுகிய-போலித்தனமான-உணர்ச்சிகளுக்கு இரையாகாமல், மற்ற பகுதியினரைப்போல முன்னேற வேண்டும். அதை மனதில் எண்ணி உழைத்திடுவோம் வாரீர், என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

# தமிழுக்குப் 'பாடுபடுபவர்களின்' தமிழறிவு காணீர்!

தமிழ்நாட்டில் சிலர் தொடங்கியுள்ள பயிற்சிமொழிக் கிளர்ச்சிக்கும் தமிழர்களுக்கும் தொடர்பே கிடையாது. தமிழ் மொழியின் பெயரால், தமிழ் மொழிக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு அரசியல் காரணங்களுக்காகவும், சுயநல எண்ணத்தோடும் துவக்கப்பட்டுள்ள இக்கிளர்ச்சியில் தமிழ்மொழியைப் பிழையில்லாமல் சரிவர எழுதத் தெரியாத இளைஞர்கள், கட்சி உணர்ச்சி காரணமாகக் கலந்துகொள்ளுகிறார்கள். தமிழகக் கல்வி அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்கு எழுதப்பட்டுள்ள சில கடிதங்கள் இந்த உண்மைகளை அம்பலமாக்குகின்றன. அவற்றிலே சிலவற்றை மட்டும் கீழே கொடுத்திருக்கிறோம்.

5-9-62

மதுரை

மகாகனம் பொருந்திய கல்வி அமைச்சர் அவர்களுக்கு,

தமிழ்நாட்டின் தாய்மொழியாக தமிழை ஆக்க வேண்டும்; தமிழைக் கொள்ளவந்த நச்சுப் பாம்புகளை ஒழிக்கவேண்டும்.

"தமிழுக்குத் துரோகம் செய்யாதீர்"

மொழி வாரி மாகாணம் அமைக்கவும் செய்யாதீர்; செய்யாதீர். தமிழுக்குத் துரோகம் செய்யாதீர்.

இப்படிக்கு

தமிழ் மாணவர்கள்

*இரா. நாராயணன்,*

*க. வீரய்யா*

இந்தக் கடிதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் அரிவாள் சுத்தி சின்னங்கள் போடப்பட்டுள்ளன. இதில் எழுத்துப் பிழைகள் இருப்பதோடு கடிதம் எழுதியிருப்பவர்கள் எதைத் தெரிவிக்க விரும்பினர்களோ, அதைச் சரியாகத் தெரிவிக்கவும் அவர்களுக்குத் தெரியவில்லை என்பது தெரிகிறது. மொழிவாரி மாகாணம் அமைக்க வேண்டும் என்று சொல்ல வந்தவர்கள் அதைச் செய்யாதீர்கள் என்றல்லவா முடித்திருக்கிருர்கள்!

* * *

13-9-62

சென்னை.

கணம் மந்திரி பக்தவத்சலம் அவர்களே நீங்கள் ஆதிக்க வெறியர்களாக ஆகிகொண்டு வருகிறீர்கள். நீங்கள் எத்தனை மந்திரிகள் கூடி மாநாடு நடத்தி ஆங்கிலத்தை கொண்டு வந்தீர்கள் என்ருல் உங்களுக்கு பாடம் கற்பிக்க தயாராக இருக்கிரேும். (தாய் மொழிக்கு உயிர் கொடுக்கத் தயார்)

தமிழே ஆட்சிமொழி தமிழே பயிற்ச்சி மொழி, தமிழே நிதி மன்றமொழி தடுப்பவர் எவரும் தமிழ் துரோகிகளே தமிழ்துரோகிகளே. தமிழ் துரோகிகளை ஒளித்து கட்ட போராடுவோம். சிறை செல்வோம் ஆனல் மன்னிப்பு எலுதி கொடுத்துவிட்டு வர கூடியவர்கள், நான் ஒரு கம்யூனிஸ்ட்

இப்படிக்கு

எம். கந்தசாமி,

சென்னை-21.

* * *

சோலூர், வ. ஆ.

5-9-62

உயர்திரு

தமிழ்நாட்டு கல்வி அமைச்சர் பக்தவச்சலம் அவர்களுக்கு வணக்கம். இப்போது நடந்துவரும் கல்விதிட்டம் சுமார் ஒரு தலைமுறையாக நடந்து வருவது. இதனல் பின் அடைந்த சமூகத்தார் ஓர் அளவு எழுத படிக்க முடிந்தது. அந்த கல்வி திட்டத்தை மாற்ருமல் இன்னும் விறிவடைய தக்க ஏர் பாடுகள் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போதுதான் பின்நடைந்த சமூகம் முன்னுக்கு வரமுடியும். இல்லாவிட்டால் படித்த சமூகம் ஒன்றும் படிக்காத சமூகம் ஒன்றும் ஏர்பட்டு எப்போதும் படித்த சமூகத்திற்கு படிக்காத சமூகம் அடிமையாக இருக்க நேரிடும். பெற்ற சுதந்திரம் படிக்காத சமூகத்திற்கு தெரியாமல் ஏமாற்றப்படும். ஆகையால் ஆரம்பள்ளி முதல் கல்லூரி வரையில் தமிழ் போதனமொழி என்று கூறி ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

அன்புள்ள,

கோவிந்தராவ்.

தமிழரசுக்கழகம்

சோலூர். வ. ஆ.

* * *

12 9-62

ஐயா,

கனம் தமிழக கல்வி அமைச்சரே. தமிழை பயிச்சி மொழி ஆக்குக. தமிழை ஆச்சிமொழி ஆக்குக தமிழை நீதிமன்றமொழி ஆக்குக தமிழ்க்கு துரோகம் செய்யாதீர்

*பி. சி. கோபால்*
*பி. சி. தாமோதரம்*
பிரம்மபுரம்
பீடி தொழிலாலி
12-9-62

இந்தக் கடிதங்களிலும் ஏராளமான எழுத்துப் பிழைகளும், சந்திப் பிழைகளும் இருப்பதைக் காண்கிறோம்.

9-10-62 அன்று சேலத்தில் அமைச்சர் உயர்திரு. பக்தவத்சலம் அவர்களிடம் தமிழ்நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகளின் சார்பாக பயிற்சிமொழிப் பிரச்னையை ஒட்டி அச்சடிக்கப்பட்ட கோரிக்கை மனு ஒன்று கொடுக்கப்பட்டது. அதன் நகல் கீழே தரப்பட்டிருக்கிறது.

சர்வகட்சி தமிழ் பாதுகாப்பு செயற்குழுவின்
கோரிக்கை.

தமிழக கல்வி அமைச்சர் கனம். எம். பக்தவச்சலம் பி.எ.பி.எல்.
அவர்கள் மேலான கவனத்திற்கு

பெருமதிப்பிற்குறிய ஐயா,

நாடு விடுதலைப் பெற்று பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன, சமுதாய நல்வாழ்விற்காக வேண்டி அரசாங்கம் ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக்கொண்டு வருகின்றது. இத்தகைய முக்கியத்வம் வாய்ந்த கட்டத்தில்

அரசுக்கும் மக்களுக்கும் நேரடி தொடர்பு இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் இன்றுள்ள நிலையில் இந்த தேசத்தில் நடக்கின்ற காரியங்களுக்கும் பெரும்பலான மக்களுக்கும் தொடர்பே காணமுடியவில்லை. சட்டம் இயற்றுதல், அரசாங்க நடவடிக்கைகள், நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் இவை யாவும் பெரும்பகுதி மக்களுக்குப் புரியாத ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றது.

விஞ்ஞானம், கணிதம், வரலாறு, தத்துவம் போன்ற துறைகளில் உயர் கட்டப்படிப்பு ஆங்கிலத்தில்தான் நடத்தப்படுகின்றது. இதனால் அரசின் நடவடிக்கைகளில் நேரடியாக மக்கள் பங்கு கொள்ளும் நல்ல வாய்ப்பை அரசு ஆங்கிலம் என்ற சுவர் போட்டு தடுத்துவிடுகின்றது. இதன் விளைவாக மக்களின் ஒத்துழைப்பை அரசாங்கம் இழக்க நேரி.டுகிறது மக்களும் அரசாங்கத்தின் திட்டங்களால் ஏற்படும் பயனை நுகர முடியாமல் இருக்கின்றனர். ஆங்கிலம் கற்ற சிறுபான்மையோருக்கே இவ்வாய்ப்பனைத்தும் கிடைக்கின்றன.

நம் நாட்டைத் தொழில் மயமாக்க திட்டமிட்டது அரசாங்கம். வளரவேண்டிய அளவுக்கு தொழில் வளராமைக்கு காரணம் விஞ்ஞானம், தொழில் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் போதிய அளவுக்கு இல்லாமையென்பது வெளிப்படை. இந்நிலைக்கு காரணம் ஆங்கில மொழியில் விஞ்ஞானம் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படுவதால்தான். தாய் மொழியில் பயிற்றுவிக்கப்பட்டிருக்குமானால் விரைவாகவும், எளிமையாகவும் மாணவர்கள் அவ்வறிவைப் பெறமுடியும். கல்லூரியில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக நீடிக்கும் வரையில் இந்நாட்டு மக்களுக்கு அரசாங்கம் பெரியதோர் தீங்கு இழைத்து வருவதாகவே ஆகும். அரசின் இம்மாதிரி போக்கால் நேரடியாகவும், மறைமுகமாகவும் மக்களுக்கு ஏற்ப்படும் தொல்லையும், துயரமும் எண்ணிலடங்கா. ஆக இவற்றிக்கு ஒரேவழி தாய்மொழி மூலம் பாடங்கள் பயிற்கப்படுவதுதான். காந்திஜி கண்ட சுயராஜ்யத்தில் இதுவே முக்கியமான அம்சம். ஆக மறைந்த அண்ணல் காந்திஜி ஆண்மா சாந்தியடைய கோடி கணக்காண பாமர மக்கள் ஊமைகளாய், ,செவிடர்களாய்

குருடர்களாய் இருக்கும் இந்த இழிநிலை மாறவும் பாடமொழி தாய்மொழியாக்கி நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லது செய்யுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

சேலம்.
8-10-62

சு. ஆ. இராமன்
அமைப்பாளர்
சோஷலிஸ்ட் கட்சி

| | |
|---|---|
| சி. மாணிக்கம்<br>செ. பெ. காளியப்பன் | சோஷலிஸ்ட் கட்சி |
| கே. என். லட்சுமணன், பி. ஏ.,<br>எஸ். எ. பழனிசாமி | ஜனசங்கம் |
| கா. சி. அங்கமுத்து<br>எஸ். சி. ராஜு | பிரஜா சோஷலிஸ்ட் கட்சி |
| கே. ஜெயராமன், பி. ஏ.,<br>கே. எ. பழனிசாமி, பி.ஏ.,பி.எல்., | திராவிட முன்னேற்ற கழகம் |
| ஆ. சின்னையன்<br>ஆ. பழனிவேலாயுதம் | தமிழரசு கழகம் |

பயிற்சிமொழி தமிழாக இருக்கவேண்டும், என்று கோரும் மேற்படி தமிழ் மனுவில் எவ்வளவு எழுத்துப்பிழைகளும், சந்திப்பிழைகளும் இருக்கின்றன, படித்தீர்களா!

கிளர்ச்சி நடத்த முன்வருபவர்களும் அவர்களால் தூண்டிவிடப் படுபவர்களும் தமிழ்மொழியினிடத்தில் - தமிழைப் பயிலுவதில் - எவ்வளவு அக்கறையும் அன்பும் கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா! இவர்கள்தான் தமிழ்மொழியைக் காப்பாற்றப் போகிறார்களாம்-மக்கள் தமிழ்மொழி இவர்களிடத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்று வேண்டுகிறார்கள் !!